DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 77/2021 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | வசந்தா |
| Father's /Husband Name | : | பாண்டியன் |
| Village | : | மருதவஞ்சேரி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 50 |
| Occupation | : | கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 13th day February 2024.
Both Accused present.

**முதல் விசாரணை:-**

கடந்த 05.09.2020 ம் தேதி மாலை 03.00 மணியளவில் மருதவஞ்சேரியிலுள்ள எனது வீட்டிலிருந்தபோது, மடையை யார் வெட்டியது என்று எதிரி சேதுராமன் எனது வீட்டு வாசலுக்கு வந்து குச்சிகாரி, தேவுடியா என்று அசிங்கமாக திட்டினார். அப்பொழுது அவ்வாறு அசிங்கமாக பேசி எதிரி சேதுராமன் மண்வெட்டியால்என் முன் தலையில் அடித்தார். அதில் எனக்கு இரத்த காயம் ஏற்பட்டது. (சாட்சி தனது காயத்தை காண்பித்து சாட்சியம் அளிக்கிறார். அவ்வாறு அடித்த பிறகு எதிரி சேதுராமன் எனது புடவையை பிடித்து இழுத்து கீழே தள்ளினான். அவ்வாறு அசிங்கமாக பேசியதால் எனக்கு அசிங்கமாக ஆகியது. (சாட்சி அழுது கொண்டே சாட்சியம் அளித்தார்), அப்பொழுது தடுக்க வந்த எனது மகன் சிலம்பரசனை எதிரி நீதிதமிழன் எதிரி சேதுராமன் வைத்திருந்த மண்வெட்டியை பிடிங்கி அடித்ததில் எனது மகன் சிலம்பரசனுக்கு வலது கண் புருவத்தில் காயம் ஏற்பட்டது. அப்பொழுது எங்களையும் அங்கிருந்த எனது கணவர் பாண்டியனையும் பார்த்து கொலை செய்து விடுவதாக எதிரிகள் மிரட்டி விட்டு சென்றார்கள். நாங்கள் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவனைக்கு சென்றோம். அங்கு நான் சிகிச்சையிலிருந்த போது போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ளள கையொப்பம் என்னுடையது தான்,. அது நான் கொடுத்தது தான், அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

எதிரிகள் எனக்கு என்ன உறவு முறை என்றால், எனது கணவரின் அண்ணன் மகன்கள். என்னை தாக்கிய பிறகு எனக்கு மயக்கம் வந்ததா என்றால் லேசாக வந்தது ஆனால் நான் விழாமல் நின்று கொண்டு தான் இருந்தேன். சேலையை பிடித்து இழுத்த பிறகு தான் நான் கீழே விழுந்தேன். எனக்கு மயக்கம் எப்பொழுது தெளிந்தது என்றால் அப்பொழுதே தெளிந்தது. நான் கீழே விழுந்த உடனே தான் எனது மகன் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால், என்னை அடித்த பிறகு தான் ஓடி வந்தார். எனது மகன் வீட்டில் டிவி பார்த்து கொண்டிருந்தார். எனது கணவருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் வீட்டின் அருகே கொல்லைபுரத்தில் மாடு அவிழ்த்து கொண்டிருந்தவருக்கு சத்தம் கேட்டவுடன் ஓடி வந்து விட்டார். என்னையும் எனது மகனையும் அடித்துவிட்டு சென்றபோது எனது கணவரையும் கொன்றுவிடுவதாக மிரட்டிவிட்டு சென்றார்கள் என்றால் சரிதான். சம்பவத்தின் போது எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால் எதிரிகள் இருவரும் தான் வந்தார்கள். மருத்துவர் என்னை விசாரித்தாரா என்றால் எத்தனை நபர்கள் அடித்தார்கள் என்று கேட்டார். எத்தனை நபர்கள் அடித்தார்கள் என்றால் எதிரிகள் இரண்டு பேரும் தான் அடித்தார்கள். மற்ற மூன்று நபர்கள் ஓடிவிட்டார்கள். அந்த ஓடிய மூன்று நபர்கள் யார் யார் என்றால் நடராஜன், ராஜவர்மன் மற்றும் நடராஜனின் மருமகன் ஆவார்,. அவர் பெயர் எனக்கு தெரியவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். போலிசார் என்னிடம் எத்தனை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் நான் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டு எனக்கு படித்து காண்பித்து சரியா என்று கேட்டு, நான் சரியென்று சொன்னபிறகு அதை எழுதிய அந்த பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள். போலிசாரிடம் ஐந்து நபர்கள் வந்ததை பற்றி கூறினேனா என்றால் கூறினேன். காயத்திலிருந்த இரத்தம் வழிந்தது என்றால் சரிதான். அதை போலிசார் பார்த்தார்கள் என்றால் சரிதான், எனது இரத்தம் படிந்த துணிகளை போலிசார் கேட்டு வாங்கினார்களா என்றால் இல்லை. எனக்கும் எதிரிகளுக்கும் எத்தனை சண்டை நடந்திருக்குமென்றால் அவர்கள் அண்ணன் தம்பிக்குள் சண்டை நடந்தது என்னுடன் எந்த

சண்டையும் சம்பவத்திற்கு முன் நடக்கவில்லை. தண்ணீர் பாய்ச்சப்பட்டதாக கூறப்படும் நிலம் எதிரிகள் குடும்பத்திற்கும் உரிமையுள்ளது என்றால் சரிதான். அவர்களது சொந்த வயலில் வாய்க்கால் போட்டார்கள் என்றால் இல்லை எங்கள் பாகத்தில் வாய்க்கால் போட்டார்கள். நான் தான் அவர்கள் வயலில் வாய்க்கால் போட்டேன் என்றால் சரியல்ல. நான் தான் எதிரிகளுடன் பலமுறை தகராறு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. போலிசாரிடம் சம்பவம் பற்றி யார் யாருக்கு தெரியும் என்று கூறினேனா என்றால் கூறினேன். யார் யாருக்கு சம்பவம் பற்றி தெரியும் என்றால் கணேசன், ஜெயராமன் ஆகியோருக்கு தெரியும். எனது கணவருடன் மொத்தம் அண்ணன் தம்பிகள் ஆறு பேர் என்றால் சரிதான். நாங்கள் ஒன்றாகவும் எதிரிகள் தரப்பினர் தனியாகவும் உள்ளார்கள் என்றால் நான் எனது துணியை பிடித்து இழுத்து அடித்ததற்காக தான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் . நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல நடந்தது. எனது கணவரும் மற்ற அவர்களது சகோதரர்களும் ஒன்றாக உள்ளார்கள் என்றாலும் எதிரிகள் குடும்பத்தினர் தனியாக வசிக்கிறார்கள் என்றாலும் சரியல்ல. நான் வேறு வகையில் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்பதற்காக புடவை பிடித்து இழுத்ததாகவும், மண் வெட்டியால் தாக்கியதாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையை தான் கூறுகிறேன்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன் M.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 77/2021 |
| Deposition of witness | : | PW-2 |
| Name | : | பாண்டியன் |
| Father's /Husband Name | : | முருகையன் |
| Village | : | மருதவஞ்சேரி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 49 |
| Occupation | : | கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 13th day February 2024.
Both Accused present.

**முதல் விசாரணை:-**

அ.சா.1 வசந்தா எனது மனைவி. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 05.09.2020 ம் தேதி மாலை 03.00 மணியளவில் மருதவஞ்சேரியில் எனது மனைவியிடம் ஆஜர் எதிரிகள் பிரச்சனை செய்து அவரை எதிரி சேதுராமன் மண்வெட்டியால் தலையில் தாக்கி காயத்தை ஏற்படுத்தினார். எனது மகன் சிலம்பரசனை எதிரி நீதிதமிழன் மண்வெட்டியால் தாக்கி கண் அருகே காயத்தை ஏற்படுத்தினார். அவ்வாறு காயத்தை ஏற்படுத்திவிட்டு, நான் தடுத்த போது என்னையும் எனது மனைவியையும், மகனையும் பார்த்து கொன்றுவிடுவதாக எதிரிகள் மிரட்டி விட்டு சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

எதிரிகள் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அண்ணன் மகன்கள். யாரோ எதிரியின் மடையை வெட்டினார்கள் என்றால் இல்லை எனது மகன் தான் பொது உரிமையுடைய மடையை வெட்டினார். எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் எவ்வளவு காலமாக சொத்து பிரச்சனை உள்ளது என்றால் சுமார் 10 ஆண்டுகளாக உள்ளது. நான் சண்டை நடக்கும் பொழுது எங்கிருந்தேன் என்றால் நான் மாடு மேய்த்து விட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். அவ்வாறு வந்த பிறகு தான் எதிரிகள் எனது மனைவியிடம் பிரச்சனை செய்து அவரையும் எனது மகனையும் அடித்தார்கள். எதிரிகள் எனது மனைவியையும் மகனையும் அடித்த விவரம் எனக்கு நேரடியாக

பார்த்ததால் தெரியும் என்றால் தெரியும். அ.சா.1 நான் சம்பவத்திற்கு பிறகு சம்பவ இடம் வந்ததாக சொன்னார் அது சரியா என்றால் இல்லை. நான் சம்பவத்தின் போது அங்கு தான் இருந்தேன். மாடு ஓட்டிவிட்டு வருவதற்குள் எதிரிகள் அ.சா.1 யையும் எனது மகனையும் அடித்துவிட்டு சென்றுவிட்டார்கள் என்றால் சம்பவ இடத்திற்கு அருகிலேயே தான் நான் இருந்தேன் சத்தம் கேட்டு நான் அங்கு சென்றேன், அப்பொழுது எதிரிகள் என்னை மிரட்டினார்கள். என்னை மிரட்டினார்களா என்றால் இல்லை என்னோடு சேர்த்து எனது மனைவி மகனையும் கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள். மாட்டை கட்டிவிட்டு வரும்போது எதிரிகள் அடித்துவிட்டு கொஞ்ச தூரம் சென்றுவிட்டாகள் . போகும் போது என்னையும் என் மனைவி மகனையும் பார்த்து மிரட்டினார்கள். போலிசார் இவ்வழக்கு தொடர்பாக விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள், எப்பொழுது எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் மருத்துவனையில் வைத்து விசாரித்தார்கள். அதன் பிறகு மீண்டும் விசாரித்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடக்கும் போது சம்பவ இடத்தில் நான் மட்டும் தான் இருந்தேன் என்றால் சரிதான். மீதமுள்ள நபர்கள் சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டார்கள் என்றால் சரிதான். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

(ஓம். M.S. பாரதிதாசன் M.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.